**கவனிக்க.-** *2015.12.18 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1947 - 2015 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2015.12.23

*1947 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1996* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2005* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்*

இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் ஆண்/ பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :-

(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு ;
(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு ;
(இ) உபகரணப் பிரிவு ;
(ஈ) பல் வைத்தியப் பிரிவு ;
(உ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு ;
(ஊ) பரிபாலன இசைப் பிரிவு.

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரி களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

**(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு.- தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :**

*அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர இயந்திரவியல்/ மோட்டார் வாகன பொறியியல் பிஎஸ்சி பட்டச் சான்றிதழ் அல்லது 3 வருட முழுநேர இயந்திர வியல் பொறியியலில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பெற்ற தொழில்நுட்ப சான்றிதழ் (என்டீடி) அல்லது இலங்கை உயர்தொழில்நுட்ப கல்வி நிலையத்தில் 3 1/2 வருட முழுநேர இயந்திரவியல் பொறியியல் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் 4 வருட முழுநேர பொறியியல் விஞ்ஞானத்தில் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (என்டீஈஎஸ்).

**(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு.- தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் - ஆண் (தொண்டர்)**

4 வருட BSc பொறியியல் பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட BSc பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது BSc பட்டத்துடன் கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா தகவல்/ பாதுகாப்பு விசேட நிபுணர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன் (கணினி செயலாக்கம் தொடர்பில் மொழி அறிவு இருத்தல் வேண்டும்.)

**(இ) உபகரணப் பிரிவு.- உணவக முகாமையாளர் - ஆண் (நிரந்தர)**

ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது தேசிய/ சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விருந்தோம்பல் உபசரணைக் கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை, இடை மற்றும் பயிற்சி பெற்றிருப்பதுடன் நட்சத்திர ஹோட்டலில் போசணசாலையும் உணவு முகாமைத்துவம் சம்பந்தமாக 2 வருட அதிகார அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ஆடைத் தொழில்நுட்ப பொறியியலாளர் - ஆண் (நிரந்தர)**

விஞ்ஞானம் தொழில்நுட்பம் அல்லது பொறியியல் விஞ்ஞா னத்தில் பிஎஸ்சி பட்டம் பெற்றிருத்தல், ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக டிப்ளோமா பெற்றிருத்தில் விசேட தகைமையாகக் கருதப்படும். ஆடையணிகள் மற்றும் உடை தொடர்பாக 5 வருட சேவை அனுபவம் மற்றும் 3 வருடம் பயிற்றுவிப்பாளராக அல்லது அறிவுரையாளராக இருத்தல் ; ஆடையணிகளின் தயாரிப்பு மற்றும் விருத்தி செய்தலில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆடை மற்றும் புடவை நிறுவனத்தில் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா இருத்தல் வேண்டும். ஆடை மற்றும் புடவை தொடர்பாக 2 வருட சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(பட்டதாரிக்கு 33 வயதை விடவும் டிப்ளோமா உரியவருக்கு 26 வயதை விடவும் 2016, மாச்சு 25 ஆந் திகதியன்று அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும்.)

**(ஈ) பல் வைத்தியப் பிரிவு.- பல் அறுவை மருத்துவர் - ஆண்/ பெண் (நிரந்தர/தொண்டர்)**

**ப்ளயிட் லெப்டினன்ட்** - பிடீஎஸ் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் எஸ்எல்எம்சி அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**பல் வைத்திய மாணவர் - ஆண்/பெண் (நிரந்தர)**

**ப்லையின் ஒபீசர்** - இறுதி பிடீஎஸ் முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் பிடீஎஸ் பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

**பைலட் ஒபீசர்** - பிடீஎஸ் 2 ஆவது பகுதியில் பூர்த்தியடைந்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு.**- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடிவடையும் வரை வான்படையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பல் வைத்திய பிடீஎஸ் பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் (எஸ்எல்எம்சீ) பதிவாகியதும் அவர்கள் பிளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப்படுவார்கள்.

கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடங் களைக் காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கவும்.

**(உ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு.- கால்நடை வைத்தியர் - ஆண் (நிரந்தர/தொண்டர்)**

பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர கால்நடை வைத்தியப் பிரிவு பிவீஎஸ்சீ பட்டச் சான்றிதழ் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் அனுபவம் இருத்தல் வேண்டும். சேவை அனுபவம் இருத்தல் மேலதிக தகைமை யாகும்.

**(ஊ) பரிபாலன இசைப் பிரிவு.- இசைக் கலைஞர் - ஆண் (நிரந்தர)**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் இசையில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

இசைக்குழுவில் பயிற்றுவித்தல் மற்றும் இசைக் குழு வினரோடு இணைந்து செயற்படும் ஆற்றல் மேலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைக் கையாளும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

அல்லது

குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை லலிதாகலா நிறுவனத்தில் பெற்ற கலைப்பட்டம் அல்லது இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது இந்தியாவில் பாத்மகாண்ட சங்கீத பீடத்தில் இரண்டாம் தரத்தில் அல்லது விஷாரராதா பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை இசைக்கும் ஆற்றல், சுருதி லயம் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்;

(இ) பால்.- ஆண்/பெண் (தேவையைப் பொறுத்து)

(ஈ) வயது.- 2016, மாச்சு 25 ஆந் திகதிக்கு -

(1) தொழில்நுட்ப, பொறியியல், பல் வைத்திய மாணவர் உபகரண (உணவக முகாமையாளர்) 18-30 வரை இருத்தல் வேண்டும் ;

(2) இலத்திரனியல் பொறியியல், பல் வைத்திய, பரிபாலன, கால்நடை வைத்தியப் பிரிவு, பரிபாலன இசைப் பிரிவு, 18-35 வரை இருத்தல் வேண்டும் ;

(உ) உயரம்.- ஆண்கள் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும். பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(ஊ) பல் வைத்திய.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும். பெண்கள் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும் ;

(எ) நிறை :- 17 < உடற்பருமன் சுட்டி < 26 (ஆண்)
17 < உடற்பருமன் சுட்டி < 25 (பெண்)

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(ஏ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது) ;

(ஐ) பார்வை வர்ணப் பதிவு மட்டம் .- CP2

(ஒ) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) பல் வைத்தியப் பிரிவு (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை தளபதியால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்து வதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் பைலட் ஒபீசர்/ ப்ளையிங் ஒபீசர்/ ப்ளைட் லெப்டினன்ட்/ ஸ்குவாட்ரன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத் துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது.

ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| பைலட் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ப்ளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| தரம் II | - ரூபா 3,06,180-4 x 7,740-10 x 7,800-3 x 12,600 = ரூபா 4,52,940 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட பிரிவு | - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள் :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 1,700 ரூபா |
| தரம் II | - 1,700 ரூபா |
| தரம் I | - 3,400 ரூபா |
| விசேட பிரிவு | - 3,400 ரூபா |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 2,125 ரூபா |
| தரம் II | - 1,700 ரூபா |
| தரம் I | - 400 ரூபா |

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு - ரூபா 35,000

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 335 ரூபா |
| தரம் II | - 383 ரூபா |
| தரம் I | - 528 ரூபா |
| விசேட பிரிவு | - 628 ரூபா |

(5) மொழித் திறமை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 795 ரூபா |
| தரம் II | - 800 ரூபா |
| தரம் I | - 1,200 ரூபா |
| விசேட பிரிவு | - 1,460 ரூபா |

(6) தேவையைப் பொருத்து பந்தி 15 (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(ஈ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 7,800 ரூபா ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் 250 ரூபா வீதம் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு 600 ரூபா ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு 4,400 ரூபா ;

(5) விசேட கொடுப்பனவு 3,000 ரூபா (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 100 ரூபா வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000 ரூபா) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு 255 ரூபா) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு 637.50 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு 15,167.70 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) மேலதிக கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்தில் 20% ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரை) வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

(18) சேவைக் கொடுப்பனவு 300 ரூபா, 400 ரூபா, 500 ரூபா. (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து).

(19) மேலதிக கொடுப்பனவு 1,500 ரூபா (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/ 20 கொடுப்பனவு, மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் X 1/20 X 3 நாட்கள் மட்டும். (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) மேலதிக கொடுப்பனவு 120 மணித்தியாலம்- ஒரு மாதத்திற்கு (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(22) வரவு செலவுத் திட்டத்தின்படி ரூபா 10,000 மாதாந்தம்.

(23) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் -

| | |
|---|---|
| விங் கமாண்டர் | - 2,000 ரூபா |
| குறூப் கப்ரன் | - 4,000 ரூபா |
| விசேட வைத்தியர் | - 7,000 ரூபா |
| வைத்தியர் | - 4,000 ரூபா |

(24) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 15,000 ரூபா (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்).

(25) கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 7,500 ரூபா (கால்நடை பல் வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் கோவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, சனவரி 08 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம் ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பத்தாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப் பட மாட்டாது.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ................. பிரிவில் அரசாணை அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆள் ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆள் ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

8. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

9. அஞ்சல் முகவரி :----.

10. E-Mail (மின்-அஞ்சல்) முகவரி :----.

11. பிறந்த திகதி :----.

12. உயரம் :----.

13. மாவட்டம் :----.

14. தேர்தற் தொகுதி :----.

15. கிராம அலுவலர் பிரிவு :----.

16. தொலைபேசி இலக்கம் :----.

17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

18. பாடசாலை அத்துடன்/ அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

23. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

25. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவ ராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

27. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத் துக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழி கிறேன். இலங்கைச் சனநாயக சோசலிகக் குடியரசின் வர்த்த மானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12-863

---

## இலங்கை நிரந்தர வான்படை

பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன :-

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்) ;
(ஆ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்/பெண்) ;
(இ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு (ஆண்)
(ஈ) உபகரணப் பிரிவு (ஆண்/பெண்) ;
(உ) நிருவாக பிரிவு (ஆண்/பெண்) ;
(ஊ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்) ;
(எ) வான் வழி நடத்துநர் பிரிவு (ஆண்).

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) BSc. (Aviation Studies) **பட்டப் பயிற்சிக்கு உட்செல் வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலா வலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)**

**பொதுக்கடமை விமான ஓட்டுநர்/வான் வழி நடத்துநர் பிரிவுகள் :**

குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக (பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்)/ உயிரியல் (பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல்) பிரிவுகளில் (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்நுட்ப பொறியியல் பிரிவு/இலத்திரனியல் பொறியியல் பிரிவுகள் :

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதிக பிரிவில் (பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம்) (தேவையைப் பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

உபகரணப் பிரிவு/ நிருவாகப் பிரிவு/ நிருவாக ரெஜிமன்ட் பிரிவுகள் :

குறைந்த பட்சம் க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதிக/ உயிரியல்/ வர்த்தக/ தொழில்நுட்பப் பிரிவுகளில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் கலைப்பிரிவு மாணவர்கள் குறைந்தபட்சம் க. பொ. த. (உ. த.) மூன்று பாடங்கள் சித்திபெற்றிருப்பின் நிருவாக ரெஜிமன்ட் பிரிவிற்கு விண்ணப்பிக்கலாம்.

3. **வேறு தகைமைகள்.**- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்ப தாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) *தேசிய இனம்* :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது :- 2016, ஏப்பிறல் 20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்* :- ஆண்- 5 அடி 6 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும் ; பெண்-5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) *உடல் நிறை* :- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ) } 2}$$

(உ) *மார்பு* :- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(எ) *தொலை பார்வை* :- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) *குடியியல் நிலை* :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப் படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின்போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப் பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 2 இலும் 3 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர்வுநாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப் படுவதுடன். (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக வும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

**8. சம்பளமும் கொடுப்பனவுகளும்.- (அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்கு மான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) -**

பயிலிளவல் : ரூபா 1,87,620
பைலட் ஆபீசர் : ரூபா 2,23,500 (பயிலிளவல் நுழைவு)
பைலட் ஆபீசர் : ரூபா 2,42,700 (பயிலிளவல் அல்லாத நுழைவு)
பிளையிங் ஆபீசர் : ரூபா 2,75,220 – 34 x 7,740 - ரூபா 5,38,380
ப்ளையிட் லெப்டினன்ட் : ரூபா 3,21,660 – 28 x 7,740 - ரூபா 5,38,380
ஸ்குவாட்ரன் லீடர் : ரூபா 3,52,620 – 24 x 7,740 - ரூபா 5,38,380
விங் கமாண்டர் : ரூபா 3,62,100 – 20 x 9,480 - ரூபா 5,51,700
குறூப் கப்ரின் : ரூபா 4,41,060 – 18 x 12,600 - ரூபா 6,67,860

(ஆ) **ஏனைய கொடுப்பனவுகள்**.-

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 7,800 ரூபா.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு 600 ரூபா.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு 4,400 ரூபா.

(5) விசேட கொடுப்பனவு 3,000 ரூபா (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 100 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு 255 ரூபா).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு 15,167.70 ரூபா (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) விசேட கொடுப்பனவு 20% அடிப்படைச் சம்பளத்தில்

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின் மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) பொதுக்கடமை விமான ஓட்டுநர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இல் இருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து 4,250 ரூபா வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(19) வரவுசெலவுத் திட்டத்தின்படி 10,000 ரூபா மாதாந்தம்.

9. **ஓய்வூதியங்கள்/ பணிக்கொடைகள்**.- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங் களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2016, சனவரி 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவியல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம்– ............................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா) ;

(2) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/ அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) ;

(4) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக் காரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும் ;

(5) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

11. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின்

தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

12. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக்கூடியவரான தேர்வுநாடிகள் வான்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

ஜீ. பி. புலத்சிங்ஹல,
எயர் மார்ஷல்,
வான் படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படையில் ........................... பிரிவில்**
**ஆண்/பெண் பயிலிளவல் அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆள் ஆளடையாள அட்டையிலுள்ளபடி) : ----.

3. தேசிய ஆள் ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

வயது (2016, ஏப்பிறல் 20 ஆந் திகதியன்று) :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் : ---- அடி, ---- அங்குலம்.

8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம அலுவலர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

14. பால் :----.

15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

16. பாடசாலை அத்துடன்/ அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

17. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

*22.* இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

*23.* இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதன் பொருட்டு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

*24.* சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

*25.* இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

*26.* நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

*27.* **விண்ணப்பக்காரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை-**

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறை களையும் அவர்கட்குப் பொருத்த மான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

*28.* **விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவல ரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 26 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ......................................... என்பவருக்கு நான் பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை யிடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் உடன் படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

*12-864*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்**

பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2015

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத பிரிவு 2 சேவை வகுதியின் பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றினதும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றினதும் பெறுபேறுகளின்படி திறமைகளின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவியின் வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படு வார்கள்.

*2.* ***சம்பளத்திட்டம்.***- இலக்கம் 06 /2006 (iv) மற்றும் 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்று நிருபத்திற்கேற்ப பரீட்சைத் தரவுகள்

உதவியாளர் III ஆம் II ஆம் மற்றும் I ஆம் தரங்களுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத்திட்டங்கள் பின்வருமாறு.

ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - 22,040 ஆகும்.
ரூபா 14,740 ஐ தாண்டிச் செல்வதற்காகத் தரம் II இற்கான பதவி உயர்வையும்
ரூபா 16,680 ஐ தாண்டிச் செல்வதற்காகத் தரம் I இற்கான பதவி உயர்வையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதியம் உடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய நிதிக்கு உதவித் தொகை வழங்க வேண்டும். இது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பதவியாகும். எனினும் திணைக்களத்தின் கீழ் தீவின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்ற நியமிக்கப்படக் கூடும். இச்சேவை வகுதியின் தரம் III இற்கு நடாத்தும் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்படுபவர்கள் 3 ஆண்டு கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்படுத்தப் படுவர்.

4. **தகைமைகள்**.- பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்காகப் பின்வரும் தகைமைகள் தேவையானதாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு வயது 21 இற்குக் குறையாதவராகவும் வயது 45 இற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(ஈ) கீழ் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி கணிதம் உட்பட மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் குறைந்தது (பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல்.

(உ) தொழிற்றகைமைகள்:

(i) ஆகக் குறைந்தது கணினி / தகவல் தொழில்நுட்ப துறைகளுக்குரிய தேசிய தொழிற்றகைமை (NVQ) 3 ஆம் மட்டம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அதற்கீடான தென அங்கீகரிக்கப்பட்ட வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) அனுபவம்.- கணினித் தரவுப் பதிவு தொடர்பாக ஆகக் குறைந்தது ஆறு மாத (6) அனுபவம் வேண்டும்.

(எ) உடற்தகைமைகள்:

(i) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற போதியளவான சிறந்த உடல் மற்றும் உளத்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் அதே சமயம் சேவையின் தேவை கருதி பகல் இரவு சேவையாற்றும் ஆற்றலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

*சகல விண்ணப்பதாரிகளும் இப்பதவிக்குரிய தகைமைகளை 2016.01.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

5. **பரீட்சை நடைமுறை**.- இப்பரீட்சை எழுத்து மூலப் பரீட்சையொன்றையும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றையும் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும் அதே சமயம் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

5.1 எழுத்துப் பரீட்சை :

| பாடம் | ஆகக் கூடுதலான புள்ளிகள் | நேரம் மணித்தியாலம் | சித்திபெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| கணினி எழுத்தறிவு | 100 | 02 | 40 % |

கணினி எழுத்தறிவு.- இவ்வினாத்தாள் கணினித் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றிய தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 3ஆம் மட்டத்திலான பாடப் பரப்பிற்குரிய அறிவைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

5.2 கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :

| பாடம் | ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை | 100 |

கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :

*குறித்த எழுத்துப் பரீட்சையில் காட்டிய திறமையின் முன்னுரிமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு பரீட்சார்த்திகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். இக்கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை இரண்டு கட்டங்களைக் கொண்டதாக அமையும்.

(அ) முதற் கட்டம் :

| | புள்ளிகள் வழங்குவதற்கான பிரதான தலைப்பு | வழங்கப்படும் ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|---|
| (i) | மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| (ii) | மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| (iii) | நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறமைகளுக்காக | 05 |
| | மொத்தப் புள்ளி | 70 |

*மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான தலைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடுதலான புள்ளிகளினுள் அப்புள்ளிகளை வழங்கப்படுவதற்கான விபரப் புள்ளித் திட்டமொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும்.

(ஆ) இரண்டாம் கட்டம்.- கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கணினி மூலம் செய்யப்படுகின்ற தட்டச்சிடும் திறமையைப் பரிசோதிப்ப

தற்காகச் செய்முறைப் பரீட்சை நடாத்தப்படும். அதற்குக் கீழே குறித்தவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | பரீட்சைக்கான நியதிகள் | வழங்கப்படும் ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| (i) | கொடுக்கப்பட்ட ஆவணத்தை கணினியூடாகப் பதிவுசெய்து தரப்பட்ட மாதிரிக்கேற்ப தயாரித்தல் | 10 |
| (ii) | கணினிப் பதிவுசெய்து பிரதியை எடுக்கச் செலவிடும் மிகக்குறைந்த காலம் | 10 |
| (iii) | திருத்தமான எழுத்துக் கோப்புக்கு | 10 |
| | மொத்தப் புள்ளி | 30 |

* எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குரிய மேற்படி இரண்டு கட்டங்களிலும் பெற்றுக் கொள்ளப்படுகின்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலான திறமை ஒழுங்கு வரிசையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடையதாக விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

5.3 இப்பரீட்சை போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெறுவதற்காக எழுத்துப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40 சதவீதமாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பங்களை நிரப்பும்போது மிகக் கவனமாகச், சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி யாதாயினும் விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என பரீட்சை நடை பெறுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சை நடைபெற்றதன் பின்னர் கண்டறியப்படும்போது, அவரது பரீட்சார்த்தியுரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொய்யானது எனக் கண்டறியப்படுமாயின் அவரை அரச சேவை யிலிருந்து நீக்க முடியும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாகும். இப்பணத்தைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் 2016.01.20 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தீவிலுள்ள எந்த ஒரு அஞ்சல் நிலையத்திலோ அல்லது உபஅஞ்சல் நிலையத்திலோ மாத்திரம் செலுத்த முடியும். அதற்காக வழங்கும் பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கட்டத்தில் கழன்று விடாதவாறு ஒட்டவேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்காலத் தேவைக்காக தம் வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. அதே சமயம், காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பப் படிவம் A4 (செ.மீ 21x29) (சாதாரண அரைத் தாளை உபயோகித்து) இல் தயாரிக்கப்பட வேண்டும் :

(அ) 1 தொடக்கம் 3 வரையான பந்திகளைத் முதலாம் பக்கத்திலும் ;

(ஆ) 4 தொடக்கம் 7 வரையான பந்திகளைத் தாளின் இரண்டாம் பக்கத்திலும் 8 தொடக்கம் பின்னரான பந்திகளைத் தாளின் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரித்துக் கொள்ளப்பட வேண்டும் ;

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும் .

*குறித்த மாதிரிப்படிவத்திற்கு ஒவ்வாத, பிழையின்றி பூரணப் படுத்தப்படாத பூரணமற்ற தன்மையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தக்கவாறு விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தாமையால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும் அதே சமயம் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவம் வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டிருந்த விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பது பற்றி விண்ணப்பதாரியே தேடிப்பார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையாயின் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படக் கூடும்.

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசி திகதி அல்லது அத்திகதிக்கு முன்பதாக சரியான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பிழையின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைக்குத் தோற்று வதற்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டையொன்றை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தல் படியான தகைமை உள்ளதா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என கண்டறியப்படுமாயின் அவ்வாறானவர்களின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப் படும்.

8.2 விண்ணப்பம் அனுப்பப்படுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "பரீட்சை தரவுகள் உதவியாளர் பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிடல் வேண்டும்.

8.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பத்தை ஒரு அரசாங்க பாடசாலை அதிபர், ஒரு சமாதான நீதவான், ஒரு சத்திய பிரமாண ஆணையாளர், ஒரு பிரசித்த நொத்தாரிசு, ஒரு சட்டத்தரணி, முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள ஒரு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிசு சேவையைச் சேர்ந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர், 2,40,260 ரூபா அல்லது அதற்கு கூடிய திரட்டிய வருட சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரினால், சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.4 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி 2016.01.20 ஆகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அத்தினத்தில் அல்லது அதற்கு முந்திய தினத்தில் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெட்டி இலக்கம் 1503, கொழும்பு.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கிய உடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல்

ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதிருக்குமாயின் அறிவித்தலில் குறிப்பிட்டிருந்தவாறு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக் களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், உங்கள் முழுப்பெயர், விலாசம், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், ஆகியவற்றை குறிப்பிட வேண்டிய அதே சமயம் நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமொன்றிலுள்ள விண்ணப்பதாரியாயின், உங்களின் மேற்படி தகவல்கள் அடங்கிய கோரிக்கை கடிதமொன்றை பக்ஸ் மூலம் பரீட்சையின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்காக உங்களின் பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு, அக்கடிதத்தை பக்ஸ் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு முன்வைத்து விண்ணப்பித்தல் சிறந்தது. மேலும் உங்களின் தகவல்களை உறுதி செய்வதற்காக நீங்கள் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பதிவு செய்த பற்றுச் சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயன் உள்ளதாக அமையும்.

*10.* விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*11.* ஒரு விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டையை வழங்குதல் அவர் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாகக் கருதக்கூடாது பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் பரீட்சார்த்திகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறி நடந்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு உட்பட நேரிடும்.

*12.* இங்கு குறிப்பிடப்படாத யாதாயினும் விடயமொன்று இருக்குமாயின், அது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்த மானியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப்பரீட்சைகள் தொடர்பான சட்டதிட்டங்களுக்கேற்ப நடந்து கொள்ளவும் கட்டுப்பட்டுள்ளனர்.

டபிள்யூ. எம். என். ஜே. புஸ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
கொழும்பு.
*2015 டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி.*

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III பதவிக்கு
ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2015

Open Competitive Examination for Recruitment to the Post of grade III Examination Data Assistant - 2015

(தரப்பட்ட கட்டத்தினுள் சரியான குறியீட்டையும் எண்ணையும் தெளிவாக குறிக்க)

[ ]

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்.

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

[ ]

(உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர்: (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதா : PERERA.A.B.C. :----.
 1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
 1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.
 1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
 2.2 நிரந்தர முகவரி (தமிழில் அல்லது சிங்களத்தில்) :----.
 2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

3. 3.1 ஆண்/பெண் பெண் - 1 ஆண் - 0 [ ]
 (உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதுக)
 3.2 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

 3.3 2016.01.20 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

 3.4 தொலைபேசி எண் :

4. கல்வித்தகைமைகள் :

 4.1 க.பொ.த (சா.தரப்) பரீட்சை பற்றிய தகவல் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

 4.2 க.பொ.த (உ. தரப்) பரீட்சை தொடர்பான விவரம் :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

5. தொழிற் தகைமைகள் :

| பாடநெறி | பயின்ற வருடம் | தொழினுட்ப நிறுவனம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. வேறு கல்வி மற்றும் தொழிற்றகைமைகள் :----.

7. நீங்கள் என்றாவது எந்த ஒரு குற்றம் தொடர்பாகவும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கட்டத்தில் √ அடையாளமிடுக) (ஆம் எனின் விவரங்கள் தருக) :

ஆம் ☐ இல்லை ☐

-----------------------------------------------------------
-----------------------------------------------------------
-----------------------------------------------------------

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் விவரம் :

(i) பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டின் இலக்கம் :----.
(iii) செலுத்திய கட்டணம் :----.

| பற்றுச் சீட்டை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டிவிடவும் |
|---|

9. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவ பூர்வமாக அறியத்தருகின்றேன். இங்கு யாதாயினும் ஒரு பகுதியை நிரப்பாமையால் மற்றும்/ அல்லது பிழையாக நிரப்பியமையால் ஏற்படுகின்ற நட்டங்களை ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளும் பிழையின்றி நிரப்பப் பட்டுள்ளதெனவும் நான் அறியத்தருகின்றேன் ;

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள யாதாயினும் தகவல் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால், நியமனம் கிடைப்பதற்கு முன்னராயின் தகைமையை இழந்தவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னராயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் எனவும் நான் அறிவேன் ;

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங் களுக்கு நான் உட்படுவேன் எனவும் அறியத்தருகின்றேன் ;

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த ஒரு தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி /செல்வி ----- என்பவர் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவரும் எனக்குத் தெரிந்தவரும் ஆவார். அவர் எனது முன்னிலையில் ------ திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்த பற்றுச் சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும் நான் சான்றுபடுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுபடுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

12-965

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.